R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
February 2021






## சுவிசேஷ ஆயத்தப் பணி

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**

Every Tuesday 6.00 P.M on Tamilan TV
Every Thursday 6.00 P.M on Tamilan TV
Every Saturday 8.00 P.M on Nambikkai TV
YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

love God
love people
be a servant



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 21 | பிப்ரவரி 2021 | கனி 3



MONTHLY THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39




பாடம் : 15


தலைப்பு : ஸ்தோத்திரபலி – Sacrifice thanks giving

வேத வாசிப்பு : லேவியராகமம் 7:12-1

1. ஸ்தோத்திரபலியோடு அதிரசங்களை - லேவி.7:12
2. ஸ்தோத்திரபலியின் மாம்சம் - லேவி.7:15
3. உதடுகளின் கனி - எபி.13:15



தேவன் ஒரு மனிதன் அல்ல
தேவன் ஒரு பட்சிக்கிற அக்கினி
தேவன் பெரியவர், அற்புதமானவர்
தேவன் எல்லாவற்றிற்கும் மேலானவர்
தேவன் வல்லமையுடையவர் - ஆமென்



God is not a man
God is a consuming fire
Great and awesome God
God is greater than all
Behold, God is mighty - Amen

the word of christ இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் YouTube வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509








**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 246

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. எந்த ராஜாவுடைய நாட்களில் சாமுவேலின் நாள் தொடங்கி, இஸ்ரவேலிலே அப்படிக்கொத்த பஸ்கா ஆசரிக்கப்படவில்லை?
2. பவுல் எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. எந்த ஆசாரியனுடைய வார்த்தைகளைக் கேட்டு சபையார் யாவரும் ஆம், நீர் சொன்ன வார்த்தைகளின்படியே செய்யவேண்டியதுதான் என்றார்கள்?
4. நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
5. யூதர்களில் சிலரை கடிந்து கொண்டு அவர்கள்மேல் வரும் சாபத்தைக்கூறி, அவர்களில் சிலரை அடித்து மயிரைப் பிய்த்து தேவன்மேல் ஆணையிடப்பண்ணினவன் யார்?
6. அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் என்னவாயின என்று விளம்பினது?
7. பூர் என்னப்பட்ட சீட்டிலிருந்து எந்த பண்டிகை யூதருக்கு வந்தது?
8. வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள் என்றவர் யார்?
9. நீங்கள் வீணான ஆறுதலை எனக்குச் சொல்லுகிறது என்ன? உங்கள் மறுமொழிகளில் உண்மைக்கேடு இருக்கிறது என்றவன் யார்?
10. அசுத்த ஆவி பிடித்த தன் மகளுக்காக இயேசுவை வேண்டிக்கொண்ட கானானிய ஸ்திரீ ஒரு கிரேக்க ஸ்திரீயா?

## வேதாகம ஆய்வு... 31

ஊசா - Uzzah



1. ஊசா என்றால் பெலம் என்று அர்த்தம்
2. ஊசா அபினதாபின் குமாரன் - 2சாமு.6:3
3. இவனும் அவனுடைய சகோதரனும் புது ரதத்தை நடத்தினார்கள் - 1நாளா.13:7
4. ஊசா பெட்டியைப் பிடிக்க தன் கையை நீட்டினான் – 1நாளா.13:9
5. ஊசா தேசமுகத்தில் செத்தான் - 1நாளா.13:10

சிறுவர் பகுதி

## விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தியவர்கள்

வேத பகுதி: 1தீமோத்தேயு1:19,20



சிறுவர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள்.

முதல் நூற்றாண்டிலே விசுவாசமாகிய கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்தியதாக பவுல் விசுவாசத்தில் உத்தம ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதியிருக்கிறார். அப்படி எந்த விசுவாசமான கப்பலைச் சேதப்படுத்தினார்கள் என்ற கேள்வி உங்களுக்கு எழும்பும். சபையை விசுவாசமான கப்பல் என்று பவுல் குறிப்பிடுகிறார். விசுவாசிக்கிறவர்கள் இந்த கப்பலாகிய கிறிஸ்துவின் சபையில் இருப்பார்கள். நோவா ஒரு பேழையை உண்டுபண்ணினார் அதுவும் விசுவாசபேழைதான் ஏனென்றால் மழை இல்லாத காலத்தில் பேழையை கட்டினார். உலகம் ஜலத்தினால் அழியப்போகிறது என்று சொல்லியும் ஜனங்கள் நம்பவில்லை. தேவன் மழையை 40 நாள் வருஷிக்கப்பண்ணியபோது ஜனங்கள் ஐயோ! ஐயோ! என்று சொல்லி கூக்குரலிட்டிருக்கக்கூடும். நோவாவும் அவனுடைய குடும்பம் மட்டும் காக்கப்பட்டார்கள்.

இன்றைக்கு இந்த விசுவாசமான பேழையை அதாவது கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்துகிறார்கள். எப்படியென்றால் சபையில் பிரிவினையை ஏற்படுத்துவது. கப்பலை சேதப்படுத்துவதற்குச் சமம். அப்படி சேதப்படுத்தினால் என்னவாகும்? கப்பல் தண்ணீரில் மூழ்கிவிடும் இல்லையா! அதைப்போல சபையை பாழடிக்க எண்ணம் கொள்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன் என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல். ஆகையால் நாமும் அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுப்போம். சில சமயங்களில் நாம் சொன்னபடி கேட்காவிட்டால் அப்பா அம்மா இப்படி சொல்லுவாங்க, அந்த கரடிகிட்ட இவனை புடிச்சுகொடுத்திடுவோம் என்று இல்லையா? ஆமாம், நாமும் விசுவாசத்தின் கப்பலை சேதப்படுத்தாது, அது விசுவாசத்தில் முன்னோக்கி செல்வதற்கு நாம் உதவியாயிருக்கணும். இருப்பீங்களா!

**மனப்பாட வசனம்:**

**“நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு”-1தீமோத்தேயு 1:18**


‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ மாத இதழை ஒவ்வொரு மாதமும் 10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509 என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்


நடப்புச்செய்திகள்

- தொழில்நுட்பங்களில் முன்னிலை வகிக்கிறது சீனா!
- பட்டியல் வகுப்பு மாணவர்களின் வங்கிக் கணக்குக்கே நேரடியாக ஸ்காலர்ஷிப் பணத்தை அனுப்ப மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஸ்மார்ட்போன் வாங்க 10,000 ரூபாய் வழங்க மேற்கு வங்க அரசு முடிவு செய்துள்ளது.




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 21 பிப்ரவரி -2021 கனி - 3


ஆசிரியருரை

## ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்
## Exhort One Another



நாம் ஒருவருக்கொருவர் ஏன், எதற்கு, எப்படி புத்திசொல்லவேண்டும் என்ற காரியங்களைக் குறித்து தியானிக்கவுள்ளோம்.

**முதலாவது ஏன் ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டும்?** கர்த்தருடைய வேதத்தில் படிக்கிறோம் "உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்" (எபி.3:13). ஒருவனாகிலும் கெட்டுப்போவதை தேவன் விரும்பவில்லை. ஆகையால் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப்போகாதபடிக்கு நாம் புத்திசொல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். பாவத்தின் விளைவால் ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். அவர்கள் பாவத்தின் வஞ்சனையினால் ஏமாற்றப்பட்டார்கள். அதைப்போல மீண்டும் வஞ்சிக்கப்பட்டு போகாதிருக்க ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டியது அவசியம்.

"மூடன் தன் தகப்பன் புத்தியை அலட்சியம்பண்ணுகிறான்; கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ விவேகி" (நீதி.15;5). இன்றைக்கு அநேகர் புத்திமதிகளை ஏற்க மறுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மூடர்கள் என காண்கிறோம். ஆனால் புத்திமதிகளை ஏற்று கவனித்து நடக்கிற மனுஷனோ விவேகி என பார்க்கிறோம். நீங்கள் புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளும் மக்களாக இருக்கிறீர்களா? அல்லது சொல்லுகிறவர்கள் சொல்லிக்கொண்டே இருக்கட்டுமென, செவிட்டு விரியனைப்போல உங்களுடைய காதுகளை அடைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அன்பானவர்களே, புத்திமதிகளை உங்களுடைய நன்மைக்காகவே சொல்லுவார்கள். சிம்சோன் என்ற ஒரு மனிதன் பழையஏற்பாட்டு காலத்திலே வாழ்ந்ததாக நாம் வேதாகமத்தில் படிக்கிறோம். "அவன் தாயும் அவன் தகப்பனும் அவனை நோக்கி: நீ போய், விருத்தசேதனமில்லாத பெலிஸ்தரிடத்தில் ஒரு பெண்ணைக் கொள்ளவேண்டியதென்ன? உன் சகோதரரின் குமாரத்திகளிலும், எங்கள் ஜனத்திலும் பெண் இல்லையா என்றார்கள். சிம்சோன் தன் தகப்பனை நோக்கி: அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ளவேண்டும் என்றான்" (நியா.14:3). இன்றைக்கு இருக்கிற அநேக வாலிப பிள்ளைகள் செய்யக்கூடிய அதே தவறை அவனும் செய்தான். அவனுடைய நிலைமை என்னவானது? பெலிஸ்த ஜனங்களோடேகூட மரித்துப்போனான். தன்னுடைய தாய் தகப்பனுடைய புத்திமதியை அசட்டைபண்ணினான்.

நீங்கள் ஒருவேளை உங்களுடைய தகப்பனுடைய ஆலோசனையையும், தாயுடைய ஆலோசனையையும் தள்ளி உங்களுடைய கண்களுக்குப் பிரியமானவைகளை செய்வீர்களானால், ஒருவேளை உங்களுடைய முடிவும் இப்படியே போய்விடும். "முடிவிலே உன் மாம்சமும் உன் சரீரமும் உருவழியும்போது நீ துக்கித்து; ஐயோ, போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்துகொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்ணினதே! என் போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்கு என் செவியைச் சாயாமலும் போனேனே! சபைக்குள்ளும் சங்கத்துக்குள்ளும் கொஞ்சங்குறைய எல்லாத் தீமைக்குமுள்ளானேனே! என்று முறையிடுவாய்" (நீதி.5:11-14). கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் என்று சொல்லுவார்கள். நாம் நலமுடன் இருக்கிற காலங்களில் நலமானவைகளை சிந்திக்கவேண்டும், புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். இவைகளையெல்லாம் ஏற்று செயல்படுத்தவேண்டிய நாட்களில் செய்யாமல் காலம் கடந்து இவைகளைக்குறித்து புலம்புவோமேயானால் என்ன பயன்? ஆகையால் புத்திமதிகளை ஏற்று கர்த்தருக்குப்பிரியமாய் வாழவும் வேதாகமத்தின் ஆலோசனைகளை தள்ளாமல் அவைகளை ஏற்று அதன்படி வாழவும் பிரயாசப்படுங்கள்.

**இரண்டாவது எதற்காக ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டும்?**

வேதம் சொல்லுகிறது; "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" (எபி.10:24-27). சிலர் நாம் நல்லாயிருந்தால்போதுமென்று வேண்டிக்கொள்வார்கள். இது தன்னலத்தை குறிக்கிறது. மற்றவர்களுடைய எந்தக்காரியத்திலும் கலந்துகொள்ளாதிருப்பார்கள். இது சரியல்ல, நாம் சபையாக கூடிவரும்போது நாம் நற்கிரியைகளுக்கு ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிக்கவேண்டும். அதை கவனிப்பதற்கு போதகர்கள் இருக்கிறார்கள் என்று எண்ணிவிடக்கூடாது. ஒரே சரீரத்தில் இருக்கும் அவயவங்களாக நாம் இருக்கிறபடியால் சரீரத்தில் உள்ள மற்றஅவயவங்களையும் பார்க்கவேண்டும். ஆகையால் நாம் புத்திசொல்லும்படியாக ஏவப்படுகிறோம்.

மேலும் சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பும் ஒருவன் பாவம் செய்வானேயானால் அவன் பாவத்தினிமித்தம் செலுத்த வேறொருபலி இல்லை என்பதை அவனுக்கு உணர்த்தவேண்டும். ஆகையால் அவன் பாவம் செய்யாமல் பாதுகாத்துக்கொள்ளும்படியாக அவனுக்கு புத்திமதிகளைச் சொல்லவேண்டியவர் களாயிருக்கிறோம். இந்த புத்திமதியான வார்த்தைகளை தள்ளி மேலும் அவன் பாவம் செய்வானேயானால் அவன் தேவனுடைய கோபாக்கினையின் பாத்திரமா யிருப்பான். அப்படிப்பட்டவர்கள் நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கொள்ளமுடியாது. ஆகையால் "புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக்கொள், அதை விட்டு விடாதே; அதைக் காத்துக்கொள், அதுவே உனக்கு ஜீவன்" என நீதி.4:13-ல் வாசிக்கிறோம். புத்திமதிகளை அலட்சியம் செய்தவர்கள் பாதாளத்திலே வேதனைப்படுவார்கள். அவ்விதமாக வேதனைப்படக்கூடிய ஐசுவரியவானைப்பற்றி படிக்கிறோம். அவன் நாவறண்டு ஆபிரகாமைநோக்கி கதறினான். அங்கே அக்கினி அவியாமலும் புழு சாவாமலும் இருக்கும். அப்படியானால் அந்த நரகத்தின்



நல்ல இருதயங்கள் வார்த்தையை ஏற்றுக்கொள்ளுமோ அங்கே பிராந்திய சபைகள் வளரும். ஒரு பிராந்திய சபையை வளரச்செய்வதற்கு அல்லது மற்ற சபைகளை உருவாக்குவதற்கு வெளியேயுள்ள எந்த நிர்வாக அமைப்பும் தேவையில்லை. இவ்விதமாக ஒவ்வொரு பிராந்திய சபையும் ஒரு வாழை மரத்தைப்போன்று இருக்கிறது. ஒரு முறை அது விதைக்கப் (நடப்) படுகிறபோது அது வெளியேயுள்ள எவ்வித அக்கறையுமின்றி வளரத்தக்க வல்லமையுடையதாய் இருக்கிறது. மேலும் அது சீக்கிரமாக புதிய வாழைக்கன்றுகளை வளரச் செய்வதற்கு காரணமாக இருக்கும். இதுவே தானே பிறருக்குச் செய்தி பரப்புவதின் பொருளாக இருக்கிறது. சபையானது சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாக இருக்கிறது என்று வேதாகமம் உரைக்கிறது (1தீமோ.3:15). ஒவ்வொரு சபையும் சத்தியத்துக்கு ஆதாரமாயிருந்து சத்தியத்தை பரப்ப வேண்டியதாயிருக்கிறது. இது பின்பு மற்ற சபைகள் ஸ்தாபிக்கப்படுவதற்கு ஒரு காரணமாக இருக்கும். அவைகளும் மற்ற பகுதிகளிலே சத்தியத்துக்கு ஆதாரமாயிருக்கும் எருசலேமிலிருந்த சபை சிதறியது, அவர்கள் எங்கும் திரிந்து வசனத்தை பிரசங்கித்தார்கள் (அப்.8:4). வெளியேயுள்ள மதப்பிரச்சார நிறுவனங்கள் அல்லது நாமகரண இயக்கங்கள் அல்லது அமைப்புகள் கர்த்தருடைய சபை பரவுவதற்கு அத்தியாவசியமானவைகள் அல்ல. கர்த்தருடைய சபையின் பிராந்திய சபைகள் சுய ஆளுகை, சுய ஆதரவு மற்றும் தானே பிறருக்கு செய்தி பரப்புதல் இவைகளை செய்கிறதினாலே சுயாதீனம் உள்ளவைகளாக இருக்கின்றன.

**கேள்விகள்**

1. ஒரு சபையானது வெளியேயிருந்து வரும் தற்காலிக ஆளுகையை ஏற்றுக்கொள்வது வேதவாக்கிங்களின் படியானதாயிருக்கிறதா? ---------------

2. ஒரு சபையானது வெளியேயிருந்து வரும் தற்காலிக ஆதரவை ஏற்றுக்கொள்வது வேதவாக்கியங்களின்படியானதாயிருக்கிறதா? --------------

3. 2கொரி.11:8 சொல்கிறது பவுல் சபைகளிடத்தில் -------------- பெற்றார் என்று.

4. பிலிப்பிபட்டணத்தார் பவுலுக்கு ------------- -------------- இன்னும் பவுலின் தேவைக்காக அனுப்பினார்கள் என்று பிலிப்.4:15,16 வசனங்கள் சொல்கின்றன.

5. பிலிப்பி பட்டணத்திலிருந்த சபையார் சுவிசேஷத்தின் ----------- பவுலுக்கு அனுப்பினார்கள் என்று பிலி.4:1 உரைக்கிறது.

6. சுய ஆதரவை கற்றுக் கொள்வதற்கு இரண்டு நல்ல உதாரணங்கள் -------- மற்றும் ----------------- ஆகும்.

7. தானே பிறருக்குச் செய்தி பரப்புதல் என்பது --------------- ஐ குறிப்பிடுகிறது.


8. லூக்கா 8:11 சொல்கிறது தேவனுடைய வார்த்தை ----------- யின் --------- இருக்கிறது என்று.

9. 1தீமோ.3:15 உரைக்கிறது சபையானது சத்தியத்திற்கு ---------- ----------- இருக்கிறது என்று.

10. அப்.8:4 சொல்கிறது சீஷர்கள் --------------- திரிந்து ----------- பிரசங்கித்தார்கள் என்று.

ஜெபியுங்கள்

- கொரோனா காலத்தில் தடுப்பு மருந்து கண்டுபிடித்தவர்களுக்காக...
- நடைபெறவிருக்கும் சட்டமன்ற தேர்தலுக்காக...
- 2021 ல் எடுத்த தீர்மானங்களில் நிலைக்க...
- நாம் செய்கிற ஒவ்வொருகாரியமும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்க..
- இந்தப் புதிய ஆண்டில் தேசம் நல்ல தலைவர்களை பெற்றிட...
- தேவசித்தம் பூமியிலே நிறைவேற்றப்பட...
- நமது மாத இதழை அநேகர் பெற்றிட...



**2. சுய ஆதரவு:** சபைகள் சுய ஆதரவு அல்லது உதவி உள்ளவர்களாயிருப்பதில் சுயாதீனமுள்ளவைகளாய் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். பிலிப்பி பட்டணத்திலிருந்த சபையார் பொருளாதார ரீதியாக சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே தனக்கு உதவி செய்ததற்காக அவர்களை புகழுகிறார் (பிலி.4:15). தேவன் விரும்புகிறபடி ஒரு பிராந்திய சபையானது பொருளாதார ரீதியாக தன்னைத் தாங்கிக் கொள்ளுகிறவரை அது முழுமையான சுயாதீனம் உள்ளதாக இருக்கிறதில்லை. தற்காலிக உதவி சில வேளைகளில் அத்தியாவசியம் ஆனதாக இருக்கலாம், ஆனால் விரைவாக சுய உதவியை அடைந்தாக வேண்டும். எப்பொழுதுதெல்லாம் வெளியேயிருந்து உதவி பெறப்படுகிறதோ, அங்கே வெளியில் உள்ளவர்கள் ஆளுகை செய்யும் காரியம் வழக்கமாகும் ஆபத்து இருக்கிறது. பிராந்திய சபைகள் தங்கள் சொந்தக் கால்களில் நிற்க வேண்டும்.

பெற்றோரால் நடக்கும்படி போதிக்கப்படுகிற ஒரு குழந்தையானது தானேநடக்கும்படி அடியெடுத்து வைக்க வேண்டியது அவசியமானதாக இருக்கிறது. குழந்தையானது தானாகவே தனியாக அடியெடுத்து வைக்க முயற்சி செய்யாவிட்டால் அது ஒரு போதும் நடக்க கற்றுக் கொள்ளாது. ஆனால் ஒவ்வொரு சுயாதீனமான அடியெடுத்து வைப்பதிலும் அது தனியாக நடப்பதை இன்னும் மேன்மையாகக் கற்றுக் கொள்கிறது. இதே விதமாக ஒரு பிராந்திய சபையானது ஆரம்பத்திலிருந்து தானே அவசியம் அடியெடுத்து வைக்க வேண்டும். மற்றவர்கள் பொருளாதார ரீதியாக அந்த சபையை எடுத்துச் செல்லும்வரை அது ஒரு போதும் தனியாக நடக்காது. ஆனால் அது தனக்காக பல அடிகள் எடுத்துவைக்கிறது, எவ்வளவு அதிகமாக கற்றுக்கொள்கிறதோ அதன்படி அது தானாகவே நடக்க இயலும். இதுவே அனுபத்தினால் சுய ஆதரவை கற்றுக்கொள்வதாக இருக்கிறது. ஒரு தாய் கோழியும் கூட தன் கோழிக்குஞ்சுகளுக்கு அனுபவத்தினாலே சுய ஆதரவை கற்றுக்கொடுக்க வேண்டியதாய் இருக்கிறது. அது எல்லா உணவையும் கண்டு பிடித்து தன் குஞ்சுகளை போஷிக்க வேண்டுமேயானால் அவைகள் சுயாதீனத்தை கற்றுக்கொள்ளாது. ஆனால் தாய் கோழியானது குஞ்சுகள் தாங்களே போஷித்துக்கொள்ளும்படி கற்றுக் கொள்ள நிர்ப்பந்தம் செய்யுமேயாகில் அவைகள் சீக்கிரமே சுதந்திரமாகவும் பலமாகவும் வளரும். சில கோழிக்குஞ்சுகள் தொடக்கத்தில் தாங்களே உணவைத் தேட மறுக்குமேயாகில் தாய்க்கோழியானது அவைகளுடனே சண்டைசெய்து தங்கள் சொந்த உணவை தேடி கண்பிடிக்கும் படி விரட்டும். சுயமாக உணவைத்தேடி உண்பதே சிறந்த திட்டம் என்பதை அவைகள் சீக்கிரமாக கற்றுக்கொள்ளும். இதே விதமாக சில பிராந்திய சபைகள் அவசியம் தங்களை தாங்களே தாங்கிக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட வேண்டும். சில சபைகள் சுய ஆதரவிற்காக போதிக்கப்பட கடிந்து கொள்ளுதலும் தேவையாய் இருக்கலாம். ஆனால் மெய்யாகவே அவர்கள் அவ்விதமாக முயற்சி செய்யும் பொழுது அவர்கள் நினைத்ததை பார்க்கிலும் அவர்கள் மேன்மையாக செய்ய முடியும் என்பதை அவர்கள் காண்கிறார்கள். அப்பொழுது அவர்கள் வளர்ந்து செழிப்படைகிறார்கள். சுய ஆதரவு என்பது மெய்யான சுதந்திரத்திற்கு உட்பட்டதாயிருக்கிறது.

**3. தானே பிறருக்கு செய்தி பரப்புதல்:**

இந்த வார்த்தை தானே ஒரு காரியத்தை தொடர்ந்து செய்வதை குறிப்பிடுகிறது. தானே பிறருக்கு செய்தி பரப்பும் ஒரு பிராந்திய சபையானது தன்னை முன்னேற்றம் செய்து கொள்வதுடன் சுவிசேஷத்தைப் பரப்பி மற்ற சபைகளையும் ஸ்தாபிக்கிறது. தேவனுடைய வார்த்தை ராஜ்யம் அல்லது சபையின் வித்தாக இருக்கிறது (லூக்.8:11). எந்த ஒரு விதையும் வேறொரு மேனியை கொண்டுவருவதற்கு அவசியமான ஜீவனை தனக்குள்ளே கொண்டதாக இருக்கிறது. அதே விதமாக வேதாகமமும் சபையை உருவாக்கவும், அதை வளரச் செய்வதற்குமான அவசியமான வல்லமை உள்ளதாக இருக்கிறது. எங்கெல்லாம்



வேதனை எப்படிப்பட்டது என்பதை அறிந்துகொள்ளுங்கள். ஆலோசனை ஒரு மனிதனுக்கு மிகவும் அவசியம். எனக்கு ஒருவரும் ஆலோசனை சொல்லவேண்டிய அவசியமில்லை என்று சொல்லுகிறவர்களே, கவனியுங்கள். நீங்கள் ஒன்றாம் வகுப்பு படிக்கவில்லையா? நீங்கள் படிக்காமலே பாஸ்பண்ணிவிட்டீர்களா? யாரோ ஒருவர் உங்களுக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார். ஆகையால் இந்த அளவு நீங்கள் வளர்ச்சியடைந்து நல்லநிலைமையில் இருக்கிறீர்கள் என்பதை மறந்துபோகாதிருங்கள். அநேகருடைய பயிற்சியினால் நீங்கள் ஒரு நல்ல நிலைமையை வந்தடைய முடியும். "ஆலோசனையில்லாமையால் எண்ணங்கள் சித்தியாமற்போம்; ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால் அவைகள் உறுதிப்படும்" என திருமறையில் படிக்கிறோம் (நீதி.15:22). அநேக ஆலோசனைக்காரர்களால் பட்டணம் நிறைவான ஆசீர்வாதங்களை பெறுகிறது. ஒரு நாடு நல்ல முன்னேற்றமடைவதற்கு காரணம் அங்குள்ள ஆலோசனைக்குழுவின் சிறப்பான திட்டங்கள். ஆம், அன்பான சகோதரனே, சகோதரியே நீங்கள் வேதாகமத்தின் ஆலோசனைக்கும், நீங்கள் கூடிவருகிற சபையின் அங்கத்தினருடைய ஆலோசனைக்கும் செவிகொடுப்பாயானால் உங்களுடைய எண்ணங்கள் உறுதிப்படும்.

**மூன்றாவதாக எப்படி ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டும்?** புத்திசொல்வதில் பல வழிகள் உண்டு. ஆனால் வேதாகமம் சொல்லுகிற ஆலோசனையைப் பார்ப்போம். "ஆகையால், ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே" (1பேது.5:6-9).

நாம் சொல்லுகிற புத்திமதியானது; மண்பாணையை எடுத்து மெதுவாக அங்கே வை என்பதைப்போன்றது. இன்னும் சொல்லப்போனால் ஒரு நேயாளிக்கு சொல்லும் ஆலோசனையைப்போன்றது. மிக கோபமாக சொல்லிவிடக்கூடாது. மிக கோபமாக செயல்பட்டுவிடவும்கூடாது. அப்படிசெய்வோமானால் அவர்கள் அந்த புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளாமல் போவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். ஆகையால் அப்போஸ்தலனாகிய பேதுரு தமது நிருபத்தில் முதலாம் அதிகாரத்தில் மிகத் தெளிவான புத்திமதிகளை கொடுக்கிறார். ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படி அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு. இதை அநேகர் மறந்துவிடுகின்றனர். உடனே எல்லாம் நடைபெறவேண்டும் அப்படியானால் நம்புவார்கள். இல்லையென்றால் விசுவாசத்தில் தளர்ந்துபோய்விடுவார்கள். வாழ்க்கையில் புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு நாம் முதலாவது தெளிவானவர்களாக தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும். நாம் தெளிவானவர்களாக இல்லையென்றால்; "புத்தியுள்ள மறு உத்தரவு சொல்லத்தகும் ஏழுபேரைப்பார்க்கிலும் சோம்பேறி தன் பார்வைக்கு அதிக ஞானமுள்ளவன்" என வேதம் நீதி.26:16-ல் சொல்லுகிறபடி, நீங்கள் ஒரு சோம்பேறியாகவும் தனக்குத் தானே ஞானியாகவும் இருப்பீர்கள் மற்றவர்களுடைய புத்திமதியான வார்த்தைகளை அசட்டைசெய்வீர்கள்.

"புத்திமதிகளைக் காத்துக்கொள்ளுகிறவன் ஜீவவழியில் இருக்கிறான்; கண்டனையை வெறுக்கிறவனோ மோசம்போகிறான்" (நீதி.10:17). நீங்கள் எந்த வழியில் இருக்கிறீர்கள்? வேதாகமம் ஜீவவழியைக்குறித்து போதிக்கிறது. இயேசு சொல்கிறார் நானே

வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்கிறார். அவருடைய வழி ஜீவவழியாகவும் சத்தியமாகவும் இருக்கிறது. இன்றைக்கு அநேகர் தாங்கள் போகும்வழி செம்மையான வழியா என்பதை உறுதிசெய்யாமல் அவ்வழியே சென்று கொண்டிருக்கின்றனர். முடிவிலே ஐயோ! தவறான வழியிலே வந்துவிட்டோமே என்று எண்ணும்போதும் தாங்கள் வந்த வழியின் தூரத்தையும் காலத்தையும் நேரத்தையும் எண்ணிப்பார்க்கும்போதும் அவர்களுக்கு அது வியப்பாக இருக்கும். நம்பிக்கையற்ற சூழ்நிலையை உருவாக்கும்.

ஆகையால், வேதாகமம் சொல்லுகிறபடி ஒருவரையொருவர் கவனித்து ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டியவர்களாக இருக்கிறோம். நீங்கள் மோசம்போகாதிருக்க வேதாகமத்தில் சொல்லப்பட்ட புத்திமதியான வசனங்களை காத்துக்கொண்டு ஜீவவழியே செல்லுங்கள். உங்கள் எதிராளியாகிய பிசாசு ஒரு சிங்கத்தைப்போல உங்களை வேட்டையாட வகைதேடி சுற்றித்திரிகிறான் என்று வசனம் நமக்கு ஒரு எச்சரிப்பை கொடுத்திருக்கிறது. ஆகையால் அவனால் நீங்கள் வஞ்சிக்கப்பட்டுபோய்விடாதிருக்க புத்திமதியாக வேதாகமத்தின் வசனங்களுக்குச் செவிகொடுங்கள். இச்செய்தியின் மூலம் நீங்கள் பெற்ற நன்மைகளை எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைக் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறோம். மேலும் வேதாகம சத்தியங்களை அறிந்துகொள்ள எங்களோடு தொடர்புகொள்ளுங்கள்.

**புத்தியை சம்பாதிக்கிற மனுஷன் பாக்கியவானா?**

ஆம், உலகத்தில் எதை எதையோ சம்பாதிக்கிறார்கள். ஆனால் சம்பாதிக்கவேண்டிய புத்தியை சம்பாதிக்காமற்போய்விடுகிறார்கள். வேதம் சொல்லுகிறது; "ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்" (நீதி.3:13). நீங்கள் உங்களுக்கு என்னத்தை சம்பாதித்து வைத்திருக்கிறீர்கள்? உலக சம்பத்துக்களையா? உங்களுக்கு வேண்டியவைகளை தேவன் ஆதியிலே கொடுத்துவிட்டார் என்பதை நீங்கள் அறிவீர்களா? அவர் உங்களுக்கு கொடுத்தவற்றை நீங்கள் பூமியில் இருக்கும்வரை அவைகளை அனுபவிக்க முடியும். அதை உங்களுடையதாக்கிக்கொள்ளவோ, அல்லது அவைகளை நீங்கள் வேறுபகுதிக்கு எடுத்துக்கொண்டு போகவோ முடியாது என்பதை அறிவீர்களா?


இப்படியிருக்கிறபடியால் நீங்கள் செய்யவேண்டியது என்ன? தேவனுடைய கற்பனைகளுக்குப் பயந்து, அவரை நீங்கள் ஸ்தோத்திரித்து, கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையாக வாழ்ந்து வேதாகமத்தின் புத்திமதியான வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு அதை நீங்கள் கைக்கொண்டும், உங்களுடைய பிள்ளைகளுக்கு அவைகளைக்குறித்து கருத்தாய் போதித்தும், அவர்கள் நடக்கவேண்டிய வழியில் அவர்களை நடத்தி உங்களுடைய குடும்பத்தை நடத்திச் செல்வீர்களானால் நீங்கள் எந்நாளும் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமாக இருப்பீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## தெரிந்து கொள்ளுவோம்

*- K.R.K.Ravi Asir*

- ❐ லட்சத்தீவின் மற்றொரு பெயர் பவளப்பாறைத் தீவு என்பதாகும்.
- ❐ கொக்கோ மரம் தோன்றிய இடம் அமேசான் காடுகள் ஆகும்.
- ❐ அகில இந்திய மல்யுத்தக் கழகம் 1921 ல் உருவாக்கப்பட்டது.
- ❐ கிரகங்களின் சுழற்சியைக் கண்டறிந்தவர் கெப்ளர்.
- ❐ காசிரங்கா சரணாலயம் அசாம் மாநிலத்தில் உள்ளது.






**வேதவாக்கியங்களின்படி**
**கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு** - Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் -10**

**பிராந்திய சபைகள் எவ்வாறு சுயாதீனம் உள்ளவைகளாயிருக்கின்றன?**

**வரைகுறிப்பு**

1. **சுய ஆளுகை**
2. **சுய ஆதரவு**
3. **சுயமாய் விருத்தியடைதல்**

**கலந்துரையாடல்**

**1. சுய ஆளுகை**. ஒரு முக்கியமான வழி என்ன வென்றால் பிராந்திய சபைகள் தாங்களே ஆளுகை செய்து கொள்ளுகிறபடியால் அவைகள் சுயாதீனம் உள்ளவைகளாய் இருக்கின்றன. இது முந்திய பல பாடங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சுய ஆளுகைக்கான உரிமையை இழந்துவிடுவது ஒரு சபையானது தனது சுயாதீனத்தை இழப்பதற்கு ஒரு நிச்சயமான வழியாக இருக்கிறது. தன்னுடைய காரியங்களை ஆளுகை செய்வதை நிறுத்தி விடும் பொழுது சீக்கிரமாக மற்றெல்லா வகையான சுதந்திரத்தையும் இழந்து விடும். மற்ற மனுஷர்கள் ஒரு சபையின் ஆளுகையை எடுத்துக்கொள்ளும் பொழுது, அது தன்னுடைய மெய்யான சுய ஆளுகையை இழந்து விடுகிறது. ஆனால் தன்னுடைய சொந்த காரியங்களை ஆளுகை செய்வது மட்டுமே ஒரு பிராந்திய சபையிலுள்ள சுதந்திரமான வகை அல்ல. அநேகமான சபைகள் தங்களுடைய சொந்தமான முடிவுகளை எடுக்கின்றன, ஆனால் இன்னும் பொருளாதாரம் மற்றும் பல காரியங்களில் வெளியில் இருந்து உதவியை சாந்திருப்பதையே தொடர்ந்து செய்கிறார்கள். சுய ஆளுகையானது ஒரு சபையை சுய ஆதரவிற்கும் முழுமையான சுதந்திரத்திற்கும் வழிநடத்துகிறதாக இருக்கவேண்டும்.

எப்படி இருப்பினும் ஒரு முக்கியமான வித்தியாசத்தை இங்கே அவசியம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு பிராந்திய சபையானது தன்னுடைய சுயாதீனத்தை இழக்காமல் புறம்பேயிருந்து வரும் ஆளுகையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் ஒரு சபை தற்காலிகமாக அதனுடைய சுதந்திரத்தை இழந்து விடாமல் தற்காலிகமான உதவியை வெளியே இருந்து பெற்றுக் கொள்ள முடியும். நாம் இதை வேதாகமத்திலிருந்து அறிந்து கொள்கிறோம். புதிய ஏற்பாட்டில் எந்த ஒரு பிராந்திய சபையும் மிக சரியாக புறம்பேயிருந்த நபர்களிடமிருந்து விதி முறையை பெற்றதாக எந்த ஒரு உதாரணமும் இல்லை. ஆனால் பிராந்திய சபைகள் தற்காலிகமான பொருளாதார உதவி மற்றும் ஆவிக்குரிய உதவியை வெளியேயிருந்து பெற்றுக்கொண்டதை நாம் வாசிக்கிறோம். யூதேயாவில் மூப்பர்கள் அல்லது கண்காணிகள் அந்தியோகியாவில் இருந்து தற்காலிகமான பொருளாதார உதவியைப் பெற்றுக்கொண்டார்கள் (அப்.11:27-30). பவுல் கொரிந்துவிலே பிரசங்கித்துக்கொண்டிருந்தபோது மற்ற சபைகளிடமிருந்து சம்பளத்தை பெற்றுக்கொண்டார் (2கொரி.11:8). பிலிப்பி பட்டணத்திலிருந்த சபை பவுலுக்கு ஒரு முறையும், மீண்டும் மற்ற இடங்களிலே பவுலின் தேவைகளுக்காக மீண்டும் அனுப்பினார்கள் (பிலி.4:1-16). ஆகையினால் வெளியேயிருந்து செய்யப்படும் தற்காலிக பொருளாதார உதவிக்கான வேதாகம உதாரணங்கள் இருக்கின்றன; ஆனால் வெளியில் இருந்து தற்காலிகமாகவோ அல்லது வேறு வகையிலோ ஆளுகை செய்யும் உதாரணங்கள் இல்லை.

A. இயல்பாக, ஆண்கள் பெண்களைக் காட்டிலும் பலமுள்ளவர்களாயிருக்கின்றனர், உடல் ரீதியாக அவர்கள் திடீர் உணர்ச்சிகளுக்கு ஆட்படுவதில் குறைவானவர்கள் மேலும் அவர்கள் ஒரு காரியத்தில் தங்கள் நினைவுகளை மாற்றுவதற்கு எளிதாக செயல்படுவதில் குறைவானவர்கள். அவர்கள் வீட்டின் "தலைவர்" ஆக இருக்கவேண்டியதும் மேலும் அவர்கள் குடும்பத்திற்கும் உடல்ரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் பொறுப்பாளியாக இருக்க வேண்டியதும் தேவனுடைய திட்டமாக இருந்தது. இந்த தலைமைத்துவ பொறுப்பில் கணவன் தோற்றுப்போகையில் ஒவ்வொருவரும் துன்பப்படுவார்கள்.

B. இயல்பாக, பெண்கள் ஆண்களைக் காட்டிலும் மனஉணர்ச்சிகளுக்குத் தீவிரமாக ஆட்கொள்ளப்படுவார்கள். நாம் மென்மை, அன்பு, புரிந்துகொள்ளும் தன்மை ஆகியவற்றில் மாபெரும் இயல்பான தன்மையைக் கொண்டிருக்கிறோம். மேலும் நம்முடைய புருஷனுக்கு அவருடைய நினைவுகள் மற்றும் தீர்மானங்களில் உதவிடும்படி ஆதரவாக இருக்கும் விஷயத்தில் உறுதியுடனிருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் நாம் எப்போதும் அவர் வீட்டின் தலைவராகவும் தன்னுடைய தலைமைத்துவத்திற்கு தேவனுக்குப் பதில் சொல்லுகிறவராகவும் இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தேவனுக்குக் கீழ்ப்படியாமலிருக்கும்படி ஏவாள் சாத்தானால் தூண்டப்பட்ட போது, வேதாகமம் சொல்லுகிறது, "....அவள் தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்" (ஆதி.3:6). பின்பு தேவன் அவர்கள் தங்களுடைய பொறுப்புகளிலிருந்து விழுந்துபோனதால் இருவர் மேலும் தண்டனையை அதிகாரப் பூர்வமாக அறிவித்தார் - ஆனால் இந்த நிகழ்வு புருஷனானவன் குடும்பத் தலைவனாயிருக்கும் தன் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் விழுந்து போனதற்கு இது முதல் எடுத்துக்காட்டாயிருந்தது.

2. பெண்கள் ஆணுக்கு நிகர் என்ற 'சம உரிமைக்' கோட்பாட்டிற்கு எச்சரிக்கையாயிருங்கள், இது அமெரிக்கா குடும்பத்திற்கும் கலாச்சாரத்திற்கும் மிகுந்த தீமையைக் கொண்டுவந்துள்ளது, மேலும் இது இந்தியாவிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தீவிரமாகப் பரவி வருகிறது. இக்கோட்பாடு எவ்வகையிலும் இன அடிப்படையில் வித்தியாசமில்லை என்கிறது.

A. குடும்பத்தைப் பற்றிய தேவனுடைய திட்டத்திற்கு இந்த நினைவுகள் முற்றிலும் முரண்பட்டிருப்பதால், மிக அதிகமான பெண்கள் "குடும்ப - பராமரிப்பாளர்" ஆக இருப்பதில்லை, ஆனால் வீட்டிற்கு வெளியே முழுநேர பணிகளை கொண்டிருக்கின்றனர். சில சூழ்நிலைகளில் உண்மையாகவே இது அத்தியாவசியமான ஒன்றாக இருக்கலாம், ஆனால் இது அநேகமாக பிரிந்த குடும்பங்களுக்கு காரணமாயிருக்கிறது மேலும் புறக்கணிக்கப்பட்ட, போதிக்கப்பட்டிராத பிள்ளைகளாக இருக்கவும் காரணமாகிறது. இது மனிதன் உணர்வற்றவனாக தங்களுடைய "குடும்பத்திற்கு" நிதிவகையிலும் வேறு எந்த ஒரு வழியிலும் ஆதரவாக இருக்கக்கூடிய பொறுப்புமில்லாதவனாக "வசிக்கும்" சூழ்நிலைக்கு கூட இட்டுச்செல்லுகிறதாய் இருக்கிறது.


B. இந்தத் திட்டத்தினால், பெண்கள் நாட்டின் சட்டங்கள் மூலம் எப்போதும் "பாதுகாக்கப்படாதவர்கள்" ஆக இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் புருஷனைப்போலவே வேலைச் சுமை முழுவதையும், பொறுப்புகளையும் சுமக்கும்படி எதிர்பார்க்கப்படுகிறார்கள். முட்டாள்தனமான பெண்கள் இத்திட்டத்தின் மூலம் ஏராளமான லாபத்தை அடைந்திருப்பதாக நம்பி ஏமாற்றப்படுகிறார்கள், ஆனால் அவர்கள் தங்களுக்கும் குடும்பத்திற்கும் முக்கியமானதெதுவோ அதனைப் பெறாமல் எல்லா வழியிலும் நஷ்டமடைந்திருக்கிறார்கள் என்பதே உண்மை.



# அஸ்திபாரம் ஏன் மிக முக்கியமானதாயிருக்கிறது?

## Why The Foundation Is Important?

-J.C.Choate



வெளிப்படையான இவ்வுலகில், ஒரு வீட்டைக் கட்ட, ஒரு மாடிவீட்டைக்கட்ட அல்லது அதிக நாட்கள் நிலைத்திருக்க வேண்டுமென எதிர்பார்த்த ஏதோ ஒன்றினைக் கட்ட முற்படும் போது, இது ஒரு சரியான அஸ்திபாரத்தின் மேல் கட்டப்படுவது அவசியம் என நாம் அறிகிறோம். நம்முடைய வேலையில் அல்லது உத்தியோகத்தில் வெற்றியடையும்படிக்கு கல்விக்கான அல்லது பயிற்சிக்கான போதுமான பணத்தைப் பெறுவதின் மூலம் போதுமான ஆயத்தம் அவசியம் என நாம் உண்மையிலேயே விழிப்புடையவர்களாய் இருக்கிறோம். நாம் அஸ்திபாரத்தையோ அல்லது எதிர்காலத்திற்கான ஆயத்தத்தைப் பற்றிய முக்கியத்துவத்தையோ நாம் அலட்சியம் செய்யும்போது, சில துரதிஷ்டத்திற்குள்ளாகிறோம்.

நம்முடைய கர்த்தர் ஒரு சிறந்த ஆவிக்குரிய அஸ்திபாரத்திற்கான அவசியத்தை, கன்மலையின் மேல் தன் வீட்டைக்கட்டின, மற்றும் மணலின் மேல் தன் வீட்டைக்கட்டின இருவருக்கு ஒப்பிட்டுக் கூறுவதின் மூலம் விளக்கினார். இயேசு, "ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான், பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்" (மத்.7:24-27).

தொடர்ச்சியான விளக்கத்தில் இயேசு, இந்த பூமிக்குரிய வீட்டைக் கட்டினவர்களில் ஒருவன் புத்தியுள்ள மனிதன் என்றும் இன்னொருவன், புத்தியில்லாத மனிதன் என்றும் போதிக்கிறார். அவர் சொல்லியபடி புத்தியுள்ள, ஆவிக்குரிய வீட்டைக்கட்டினவன் கிறிஸ்து சொல்லுவதைக் கேட்டு அதின்படி செய்கிறவனாய் இருக்கிறான் என காண்பிக்கிறார். அவன் ஒரு புத்தியுள்ள கட்டடக் கலைஞன் ஏனென்றால் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அவன் கிறிஸ்துவின் மேல் கட்டுகிறான். அவன் கிறிஸ்துவினிடத்திற்கு வரும்வரைக்கும் பழைய பழக்கவழக்கங்களையும், பாரம்பரியங்களையும், உலகக்காரியங்களையும், மனுஷருடைய சமயப் போதனைகளையும் தோண்டிபுதைத்து, அவருடைய போதனைகளுக்கும், அவருடைய வழியினிடத்திற்கும் திரும்பி, அங்கே கட்டுகிறான். அதன் விளைவாக, அவன் அசையாத அஸ்திபாரத்தின் மேலிருக்கிறான். அவன் சத்தியத்தை உடையவனாயிருக்கிறான், அவன் கிறிஸ்துவை உடையவனாயிருக்கிறான். அவன் ஒரு கிறிஸ்தவனாயிருக்கிறான். அவன் கர்த்தருடைய சபை அங்கத்தினனாயிருக்கிறான். அவனை ஒன்றும் அசைக்கமுடியாது. அவர் கற்றுக்கொண்ட ஒன்றை விட்டுவிடாமல் உறுதியாகப் பற்றிக்கொண்டவனாயிருக்கிறான். அவன் நித்திய ஜீவனைக் குறித்த நம்பிக்கையுடையவனாயிருக்கிறான்.

இயேசு பேசுகிற இன்னொரு மனுஷன் ஒரு புத்தியில்லாத கட்டடக்கலைஞன். அவனும் கிறிஸ்துவினுடைய போதனைகளைக் கேட்கிறான் ஆனால் அதற்குக் கீழ்ப்படிய தவறிவிடுகிறான். ஒருவேளை இவன் நம்பிக்கையற்றவனாயிருக்கலாம். அவன்

அதிகமான சமயம் உண்டு என நினைத்திருக்கலாம். அவன் தான் தேவையான அளவு நல்லவன் என காரணம் காட்டியிருக்கலாம். அல்லது அவன் மனுஷருடைய போதனைகளுக்குப் பின் செல்லுகிறவனாயிருந்திருப்பான். என்ன பிரச்சனையாயிருந்தாலும் அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிய தவறுகிறான் என்பது தான் உண்மை, ஆனபடியினால், அவன் முடிவிலே கட்டின கட்டடம் நிலைபெறாது. அவன் இழந்தவனாகவும் நித்திய அழிவைப் பெற்றவனாகவுமிருப்பான்.

நீண்ட நாட்களுக்கு முன்பாக அந்நாளில் சீயோனிலே கர்த்தர் அஸ்திபாரமிடுவார் என ஏசாயா சுட்டிக் காண்பிக்கிறார். அந்த அஸ்திபாரம் கிறிஸ்து ஆகும் என்றும் அது எருசலேமிலே ஸ்தாபிக்கப்படும் என்றும் கூறுகிறார். நாம் இந்த தீர்க்கதரிசன வசனத்தை வாசிப்போமாக. ஏசாயா, "ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது; இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும்; விசுவாசிக்கிறவன் பதறான்" (ஏசா.28:16) என்று சொன்னான். தயைகூர்ந்து அஸ்திபாரத்தைக் குறித்ததான இவ்விளக்கத்தை கவனியுங்கள். இது ஒரு கல்லாயிருக்கும், ஒரு பரீட்சிக்கப்பட்ட கல்லாயிருக்கும், ஒரு விலையேறப்பட்ட மூலைக்கல்லாயிருக்கும், மேலும் ஒரு திட அஸ்திபாரமுள்ள கல்லாயிருக்கும். வர்ணிக்கப்பட்டுள்ள இந்த வார்த்தையை பின்னர் நாம் புதிய ஏற்பாட்டில், இவையெல்லாம் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பிடுகிறதாக காண்போம். ஆனால் சங்கீதக்காரனாகிய தாவீது சங்கீதம் 118:22,23-ல் பாடிய போது, "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது" என்று இந்த அஸ்திபாரத்தைச் சுட்டிக்காட்டினார். நாமும்கூட புதிய ஏற்பாட்டில் இந்த தீர்க்கதரிசன வசனம் கிறிஸ்துவில் நிறைவேறினதாகக் காண்கிறோம்.

நாம் இயேசுவின் நாட்களுக்கு திரும்புகையில், இயேசு அவர்களை நோக்கி; வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? இதை மத்தேயு21:42-ல் வாசிக்கிறோம். லூக்கா20:17,18-ல் இயேசு பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் பேசுகையில், ".....வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின் கருத்தென்ன? அந்தக் கல்லின்மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப் போவான், அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்றார்". நேரிடையான ஒரு கல் அல்லது ஒரு கற்பாறையானது அஸ்திபாரத்திற்குப் பயன்படக்கூடியவையாயிருக்கிறது ஆனால் ஒருவன் அதில் தடுமாறி விழுந்தாலும் அல்லது அது அவன்மேல் விழுந்தாலும் அவன் நசுக்கப்படுவான் அல்லது கொல்லப்படுவான். அதைப்போல, அந்தக் கல் ஒருவன் மேல் விழுந்தால் அது அவனை அழித்துப்போடும். இன்னொரு வார்த்தையில், சரியானமுறையில் பயன்படுத்தும் போது அது ஆசீர்வாதமாயிருக்கும். ஆனால் அதை அசட்டை செய்யும்போது அல்லது தவறாக பயன்படுத்தும்போது அது அழிக்கக்கூடிய சக்தியாக இருக்கும். ஆவிக்குரிய கன்மலையாகிய, கிறிஸ்துவோடு ஒப்பிடும்போதும் இதுவே உண்மையாயிருக்கிறது.

அப்போஸ்தலர் புத்தகத்திற்குத் தொடந்து செல்கையில், பேதுரு சொஸ்தமாக்கப்பட்டிருந்த ஒரு மனிதனைப்பற்றி பிரதான ஆசாரியர்களிடத்தும், தேவாலயத்துச் சேனைத்தலைவனிடத்தும் சதுசேயரிடத்தும் பேசுகிறதைக் காண்கிறோம். அவன், "உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்ககடவது. வீடுகட்டுகிறவர்களாகிய



B. இந்திய கலாச்சாரத்தில் பணம் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது: "மணப்பெண் விலை" மற்றும் சிரமப்பட்டு செய்து முடிக்கும் திருமணமாயிருக்கிறது. அநேக சமயங்களில் "கிறிஸ்தவ" திருமணங்களும் கூட பெரிய கடனுக்குள்ளாகி மிக அதிகம் செலவு செய்கிறதாக இருக்கிறது. எனவே குடும்பங்கள் கடனைக் கட்டித்தீர்க்கப் பல வருடங்களாகப் போராடுகின்றன. கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களைத் திருமணம் செய்யும் போது நாம் ஒரு "கிறிஸ்தவக் கலாச்சாரத்தைக்" கொண்டவர்களாக இருப்பது அவசியம், அதாவது வெளியிலிருப்பவர்களுக்கு முன்பாக ஒரு பெரிய முத்திரை பதிக்க வேண்டும் என்பதற்காக பெரிய அளவில் பணத்தை செலவழிக்கத் துரிதப்படுவதைப் புறக்கணிக்க வேண்டும்

C. ஒரு பிரமாண்டமான திருமணம் முக்கியமல்ல; இரு ஜனங்களுடைய வாழ்க்கை இணைவதே முக்கிமான காரியமாகும், புது தம்பதியினருக்கு நிதிரீதியாக அவர்கள் தங்கள் சொந்த காலில் நின்று சமாளிக்க உதவுகின்ற வகையில் "திருமண பணத்தை" முதலீடு செய்வதன் மூலம் ஒரு புதிய கிறிஸ்தவ குடும்பத்தை உறுதியாக அமைத்திட உதவுவது மிக நன்மைபயக்கக் கூடியதாக இருக்கும்.

**2. "காதல் தோழனை/தோழியை சந்திக்க ஏற்பாடு செய்தல்"**

A. அதிகமான சூழ்நிலைகளில், நாம் கிறிஸ்தவர்களல்லாதவர்களை காதலர்களாக சந்திக்க முயன்றால், நாம் அவர்களால் கடுமையாகப் பாதிக்கப்படுவோம். இது ஒருவேளை பாலியல் ஒழுக்கமற்ற நடத்தைக்கும், போதையும், மதுவுக்கும், இன்னும் பாலவற்றுக்கும்... கொண்டுசெல்லலாம்.

B. சிலசமயங்களில் கிறிஸ்தவரல்லாத துணையை மதமாற்றத்தில் திருமணம் செய்வதின் விளைவு ஒரு உறுதியான கிறிஸ்தவ திருமணமாய் அமைகிறது என்பது உண்மை தான், ஆனால் புள்ளிவிவரம் ஒரு கிறிஸ்தவப்பெண் ஒரு கிறிஸ்தவனல்லாத ஆணை திருமணம் செய்கிற போது, அதிகமான வேளைகளில் கிறிஸ்தவ பெண்/ஆண் சபையை விட்டு விலகி தேவனை விட்டு தூரம் போய் விழுந்துவிடுகின்றனர்.

C. ஒரு கிறிஸ்தவரல்லாதவரை காதலராக சந்திக்க முயலும்போது, துவக்கத்தில் ஒப்புகொடுத்தல் சரியாக இருக்கிறது, "ஒன்று, அவன் கற்று சத்தியத்திற்கு முழுவதும் ஒப்புக்கொடுத்துக் கீழ்ப்படிகிறான், அல்லது நான் அவனை திருமணம் செய்யமாட்டேன் என்கிறாள்" காதலரை சபைக்கு வெளியே தேட முயல்வது ஓர் நித்திய/நிரந்தரமான ஆபத்தை ஏற்படுத்த முடியும் என இதிலிருந்து நாம் காண முடியும். அநேகமாக ஒரு தீர்மானம் ஒருவரின் பிள்ளைகளின் பேரப்பிள்ளைகளின் சந்ததிகளுக்கான வழித்தோன்றல்களின் நித்திய விதியை இது தீர்மானிக்கும். உங்களுடைய அருமையான இளம்பிள்ளைகள் தேவனை ஒரு போதும் அறியாதிருக்கிறபடியினால் அதன் விளைவை சந்திக்கும்படி ஒரு தவறான தீர்மானத்தை எடுக்க விரும்புகிறீர்களா?

D. கிறிஸ்தவ துணை கிடைக்காவிட்டால், ஒருபோதும் திருமணம் செய்யாதிருப்பது மிக நல்லது.

## IV. திருமணம் – மனைவியும் புருஷனும்:

ஆதிமுதற்கொண்டே, ஏவாள் ஆதாமை முழுமைப்படுத்தும்படிக்கே சிருஷ்டிக்கப்பட்டாள், இருவரும் "ஒரே மாம்சமாக" இருப்பார்கள் (ஆதி.2:24).

1. எபேசியர் 5:22,23: "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சுயசரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்".

பெண்கள் பகுதி

## ஒரு கிறிஸ்தவப் பெண்ணாக என்னுடைய பணி

My Work As a Christian Woman

-Betty



**முன்னுரை:**

அர்ப்பணியுங்கள்: "தேவனுக்கு உங்களை ஒப்படைப்பது குறித்து என்ன கூற விரும்புகிறீர்கள்? நீங்கள் உண்மையாகவே இதுபற்றி பேசுவீர்களென்றால் தேவன் பதிலளிக்க என்ன செய்வார்? இப்படிப்பட்ட ஒப்புக்கொடுத் தலை செய்வதில் நாம் மிகக் கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும், ஏனென்றால் துவக்கத்தில், தேவன் நமக்கு என்ன செய்வார் என்ற எந்த யோசனையும் கொண்டிருக்க முடியாது!

### I. என்னுடைய பின்னணி:

வாலிபம், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிதல்

**(பாடல்)**

பதின்ம வயது -

12 J.C.ஐ சந்தித்தல்

15 திருமணம் முடிந்தது

17 கலிபோர்னியாவுக்கு இடம் பெயர்ந்து, பின்பு மின்னஸோட்டாவுக்கு குடும்பத்தை விட்டு வெகுதூரம் சென்றோம்

21 பாக்கிஸ்தானுக்கு இடம் பெயர்ந்தோம்

27 இலங்கை சென்றோம்

28 இந்தியா சென்றோம்

65 பயிற்சி பெற்றோம்

68 என்னுடைய வீட்டின் தலைவரை இழந்தேன்

79 மீண்டும் இந்தியாவுக்குத் தனியாக வந்தேன்? இனி என்ன?...???

### II. உங்கள் வாலிபமும், பதின்ம வயதும்:

நீங்கள் என்ன வாசித்தீர்களோ, உற்று கவனித்தீர்களோ, ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு இது போன்றவற்றின் மூலம் நீங்கள் வயது வந்த பருவத்திற்குள் வடிவமைக்கப்படுகின்றீர்கள். வளர் இளம் பருவத்தில் இவர்களுடைய முழு வாழ்க்கையும் பாழாக்கும் மோசமான தவறுகள் அடிக்கடி ஏற்படுகின்றன. முதுமை அடைந்திராத இளமை பருவம் அதிகமாக வடிவமைக்கக் கூடிய வருடங்களாகவும், பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுடன் நெருக்கமான அன்பான உறவினையும், மாதிரியாகவும், விவேகத்துடனும், வேதாகமச் சட்டங்களைப் போதிப்பதிலும் கடைசியாக பெற்றோருக்குரிய அதிகாரத்தைக் காண்பித்தலையும் வளர்த்துக் கொள்ள வேண்டும், ஏனென்றால் இளம் பருவத்தின் நாட்களில் (இக்காலங்கள் மிக மோசமான நினைவுகளிலும் போராட்டத்திலும் சுதந்தரமாக செயல்படச் செய்யும்) மோசமடைவதற்கான வாய்ப்புகள் முன்னமே வந்தடைந்ததாக இருக்கிறது.

### III. ஒரு வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்தல்:

**1. ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங்கள்**

A. இந்தியாவில் ஒழுங்குசெய்யப்பட்ட திருமணங்கள் நடைபெறுவது வழக்கமாக இருக்கின்றது. கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட விரும்பிய நபர் ஏற்கனவே கர்த்தருடைய சபையில் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு அங்கமாக இருக்க வேண்டும் அல்லது அப்படியில்லையென்றால் பெற்றோர்கள் முதலாவது அந்த நபருக்கு உபதேசம்பண்ணி மனந்திரும்ப வைக்கவேண்டியது அவர்களுடைய முதல் முக்கியத்துவமாயிருக்க வேண்டும்.



உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்'' (அப்.4:10-12). பவுல் இஸ்ரவேல் அல்லது யூதர்களைக் குறித்து, ''நீதிப்பிரமாணத்தைத்தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை. என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடைவில்லை, இடறுதற்கான கல்லில் இடறினார்கள். இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று'' (ரோம.9:31-33) இங்கே, நிச்சயமாக, பவுல் ஏசாயா 28:16 லிருந்து எடுத்துக்காட்டுகிறான்.

ஆனால் யார் அந்த கன்மலை அல்லது அஸ்திபாரம்? பவுல், ''போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது'' (1கொரி.3:11) என்றும் 1கொரிந்தியர் 10:3,4-ல் பவுல் மோசே காலத்து இஸ்ரவேலரைக் குறித்து, ''எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே'' என்றும் சொன்னான்.

எபேசு சபை கிறிஸ்தவர்களிடம் பேசுகையில், பவுல் ''ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்;அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது;அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்'' (எபே.2:19-22) என்றான். இங்கே அப்போஸ்தலன் சபையாகிய தேவனுடைய குடும்பம் அல்லது தேவனுடைய பண்ணையாயிருக்கின்ற கிறிஸ்தவர்களைக் குறித்து பேசி, சபை எவ்வாறு அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளின் உபதேசத்தினால் கட்டப்பட்டதென பேசிக்கொண்டிருக்கிறான். பொதுவான அஸ்திபாரம் மட்டும் முக்கியமல்ல, ஆனால் அஸ்திபாரத்தின் முக்கியமான பாகமே இதுதான், கிறிஸ்துவே அந்த அஸ்திபாரத்தின் பாகமென அவன் கூறினான். அந்த அஸ்திபாரமில்லாமல் பூமிக்குரிய அல்லது ஆவிக்குரிய வீடு நிலைத்திராது. மீண்டும் பவுல், ''தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது'' (1தீமோ.3:15).

தன்னுடைய காலத்து கிறிஸ்தவர்களிடம் அப்போஸ்தலனாகிய பேதுரு, ''இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். அந்தப்படியே; இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன்

வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிருக்கிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன் மலையுமாயிற்று. அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்'' என்றான் (1பேது.2:8).

மீண்டும் ஏசாயா28:16-ல் எவ்வாறு கிறிஸ்து பிரதான மூலைக்கல்லாகி, சொல்லப்பட்டட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இருந்தாரென இந்த எழுத்தர் காண்பிக்கின்றதை நம்மால் காணமுடிகிறது. யூதர்கள் மறுதலித்தவர்களாய் அஸ்திபாரத்தைக் குறித்துமட்டுமல்லாது அஸ்திபாரத்திற்கு மிக முக்கியமான பகுதியாகிய பிரதான மூலைக்கல்லைக் குறித்தும் இடறினார்கள். மேலும் பேதுரு, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்தவர்கள் எவ்வாறு ஆசீர்வதிக்கப்ட்டவர் களாகவும், அவரை மறுதலித்தவர்கள் எவ்வாறு இழந்து போவார்கள் எனவும் வெளிப்படுத்துகிறார்.

மத்தேயு 16:13-19-ல் கிறிஸ்து அப்போஸ்தலர்களிடம் உலகம் தம்மைக்குறித்து என்ன நினைக்கிறது என்பது பற்றி கேட்டார். அதற்கு அப்போஸ்தலர்கள் சிலர் அவரை ஒரு தீர்க்கதரிசி என்றும் வேறுசிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். ஆனால் கிறிஸ்து இதை எதிர்பார்க்கவில்லை. அவர் தம்முடைய சபையை இப்படிப்பட்ட விசுவாசமுள்ளவர்கள் மேல் கட்டவில்லை. பிறகு அவர் அப்போஸ்தலரை நோக்கி: அப்போஸ்தலர்கள் தம்மை குறித்து என்ன நினைக்கிறார்கள் எனக்கேட்டார். அவர்கள் அவர் தேவனுடைய குமாரன் என தாங்கள் விசுவாசிப்பதாக விளக்கினார்கள். அதன் விளைவாக கர்த்தர் அதன்பின் தம்மை அவர்கள் தேவனுடைய குமாரன் என விசுவாசித்தார்கள் என்ற அந்த அறிக்கையின் மேல் தம்முடைய சபையைக் கட்டப்போவதாகச் சொல்லி பதிலளித்தார். அப்போஸ்தலர் 2-ல் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கம்பண்ணினார்கள், மூவாயிரம் ஆத்துமாக்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். அவர்களை அவர் இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்தார். ஆனால் அவர் எதன் மேல் சபையைக் கட்டினார்? சபை கிறிஸ்துமேல் கட்டப்பட்டது; அதாவது அவர் தேவனுடைய குமாரனாயிருந்தார் என்ற அந்த சத்தியத்தின் மேல் கட்டினார். இது மாத்திரமல்ல, ஆனால் சபை தொடர்ந்து, நமது ஜீவியம் பரியந்தமும் முடிய அந்த சத்தியத்தின் மேல் இளைப்பாறுகிறது. கிறிஸ்து தேவனுடைய குமாரன் அல்ல என்று கடந்த காலங்களில் நிரூபிக்கப்பட்டிருக்குமானால், பிறகு சபையானது பல நாட்களுக்கு முன்பாகவே வீழ்ந்துபோயிருக்கும் அல்லது நிலை நிற்காமல் போயிருக்கும். ஆனால் சபை தொடர்ந்து நிலைத்திருக்கிறது, கிறிஸ்துவே கன்மலையாகி, பிரதான மூலைக்கல்லாகி குமாரன் என்ற சத்தியத்தின் மேல் அஸ்திபாரமிட்டிருக்கிற அது நிலைத்திருப்பதற்கான ஒரே வழியாயிருக்கிறது. பவுல் சொல்லியபடி, அவரே உறுதியான அஸ்திபாரமாயிருக்கிறார்.

என்னுடைய நண்பரே, நீங்கள் எதனை கட்டிக்கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் அவர் சொல்லுகிறதைக் கேட்டு, அதன்படி செய்தால், நீங்களும் கிறிஸ்துவின் மேல் கட்டமுடியும். நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தால், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவில் கொண்டுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, உங்கள் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டால், கர்த்தர் உங்களை இரட்சித்து உங்களை கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்டுள்ள சபையில் சேர்த்துக் கொள்வார் (அப்.2). நீங்கள் ஞானவானாயிருப்பீரென்றால், இதைச் செய்யுங்கள். நீங்கள் அவ்வாறிருக்க நாங்கள் ஜெபிக்கிறோம்




**சந்தா செலுத்திவிட்டீர்களா?**

The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001




**வேதகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**
**ஆம் எனில் ☑ குறியிடவும்**



**தற்சோதனை பகுதி - 29**

**29. அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்குண்டா?**

1. அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக ☐ வசன ஆதாரம் ---
2. கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவுண்டு ☐ வசன ஆதாரம் --------
3. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமில்லை ☐ வசன ஆதாரம்---------------
4. ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமுண்டு ☐ வசன ஆதாரம் ---------------
5. தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமில்லை ☐ வசன ஆதாரம் --------------------------------------------------
6. அஞ்ஞானிகள் பலியிடுவது தேவனுக்கு ☐ வசன ஆதாரம்----------
7. நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாது ☐ வசன ஆதாரம்--------------------------------
8. விக்கிரகாராதனைக்கு விலகி ஓடாதிருங்கள் ☐ வசன ஆதாரம்----------
9. அவிசுவாசிகளில் ஒருவன் உங்களை விருந்துக்கு அழைக்கும்போது ஒன்றையும் விசாரியாமல் புசியுங்கள் ☐ வசன ஆதாரம் -----------------
10. இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது என்று ஒருவன் உங்களுக்குச் சொன்னாலும் புசியுங்கள் ☐ வசன ஆதாரம் -------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

போகிறாயா என்று கேட்டார்கள். அவள்: போகிறேன் என்றாள்" (வச.57,58). இது இவளுடைய தீர்க்கமான பதிலாக இருக்கிறது. நடந்த எல்லாவற்றையும் கண்டு அறிந்து கொண்டவள், இது கர்த்தரால் வந்த காரியம், தேவனுடைய அநாதி தீர்மானம் என்பதையும் அறிந்து தேவசித்தம் செய்ய திட்டமிட்டுள்ளாள். இவள் குடியிருந்து வந்த பகுதி மெசொப்பொத்தாமியா (இப்போதிருக்கிற சிரியா தேசத்தின் வடதேசம்) (வச.10). ஈசாக்கு தென்தேசத்தில் லாகாய்ரோயீ என்ற பகுதியில் குடியிருந்தான். மெசொப்பொத்தா மியாவுக்கும் லாகாய்ரோயீ என்ற பகுதிக்கும் இடையேயுள்ள தூரம் 800 அல்லது 900 கிலோமீட்டர் எனச் சொல்லப்படுகிறது.

ரெபெக்காளோ இதைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை, தன் தாயின் வீட்டாரைவிட்டு இவ்வளவு தூரம் செல்லுகிறோமே என்ற பயமும் அவளிடம் காணப்பட்டதாகத் தெரியவில்லை. இவ்வாறாக தெளிவான திட்டமிடக்கூடியவளாக மட்டுமல்லாது அதனை நிறைவேற்றும்படி கிரியை நடப்பிப்பவளாக ஆபிரகாமின் ஊழியக்காரனோடு புறப்பட்டு ஒட்டகத்தில் தன் பயணத்தை மேற்கொண்டாள். "அப்படியே அவர்கள் தங்கள் சகோதரியாகிய ரெபெக்காளையும், அவள் தாதியையும், ஆபிரகாமின் ஊழியக்காரனையும், அவன் மனிதரையும் அனுப்புவித்து, ரெபெக்காளை வாழ்த்தி: எங்கள் சகோதரியே, நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக; உன் சந்ததியார் தங்கள் பகைஞருடைய வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்வார்களாக என்று ஆசீர்வதித்தார்கள்" (வச.9-60).

கடைசியாக, அவள் ஒரு அடக்கமுடைய பெண்மணியாகவும் திகழ்ந்தாள் என வசனங்கள் 63 முதல் 65 வசனங்களில் வாசிக்கிறோம். "ரெபெக்காளும் தன் கண்களை ஏறெடுத்து ஈசாக்கைக் கண்டபோது, ஊழியக்காரனை நோக்கி: அங்கே வெளியிலே நமக்கு எதிராக நடந்து வருகிற அந்த மனிதன் யார் என்று கேட்டாள். அவர்தான் என் எஜமான் என்று ஊழியக்காரன் சொன்னான். அப்பொழுது அவள் ஒட்டகத்தை விட்டிறங்கி முக்காடிட்டுக்கொண்டாள். "ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள்" என 1தீமோ.2:11 ல் வாசிக்கிறோம். "அந்தபடியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்..." (1பேது.3:6) என வாசிக்கிறோம். இவள் மகா ரூபவதி என வர்ணிக்கப்பட்டுள்ளாள். ஆனால் இன்றைய நாளில் காணப்படும் வாலிபப் பிள்ளைகளைப் போலல்லாது அல்லது எந்த மேட்டிமையும் இல்லாதவளாக, தன் மாமனார் ஆபிரகாமைப் போல அந்நியரை உபசரிக்கிறவளாகவும் தேவனுடைய தீர்மானத்தின்படி, இன்றுவரை கடற்கரை மணலத்தனையான வாக்குத்தத்தமுள்ள பிள்ளைகளுக்கு சுயாதீனமுள்ளவளாகவும் இருக்கிறாள் (கலா.4:22,31; ரோம.9:7-13). "ஈசாக்கு ரெபெக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டு, அவளை நேசித்தான். ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான்" (ஆதி.24:67).

அன்பான சகோதரிகளே, நம்முடைய பிள்ளைகள் இவ்வாறான குணாதிசயங்களை உடையவர்களாகக் காணப்படுகின்றனரா அல்லது இக்காலத்தில் தன் புருஷனை வாடா, போடா என அழைத்துக் கொண்டு வரும் பெண்களைப் போலிருக்கின்றார்களா? எப்போதுமே, ஸ்திரீகளாகள் தன் குடும்பத்தை நடத்தும் பொறுப்புடையவர்கள். எனவே நம்முடைய பண்புகள் கிரியைகள்தான் நம்முடைய பிள்ளைகளுக்கு மாதிரியாக இருக்கின்றன. நாம் எப்படியோ, நம்முடைய பிள்ளைகளும் அப்படியே! 'தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை' என்பது பழமொழி. நாம் பக்தியுள்ள ஸ்திரீகளுக்கேற்றபடி நடப்போம் (1தீமோ.2:10-13). நம் பிள்ளைகளையும் கர்த்தர் தம்முடைய ஆசீர்வாங்களுக்கு நேராக நடத்துவாராக! ஆமென்!





## ரெபெக்காள் – Rebekah

-Glory Arjunan



ரெபெக்காள், ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட மகாரூபவதியான பெண். கிறிஸ்தவ ஸ்திரீகள் அநேகருக்கு இவளைப் பற்றிய காரியங்கள் நன்றாகத் தெரிந்திருக்கும். இவள் ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கின் மனைவி மேலும் இஸ்ரவேல் சந்ததி உருவாக கருவியாக இருந்தவள். இவளுடைய குணாதிசயங்களும் அற்புதமானவைகள். இவைகள் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் பிரயோஜனமானவைகளாக இருக்குமென நம்புகிறேன்.

பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் ஆதியாகமம் 24 ம் அதிகாரம் முழுமையும் வாசித்தோமானால், பெண்பார்ப்பது, பெண்ணின் நடவடிக்கைகள், பெண் வீட்டாரின் உபசரணைகள், மாப்பிள்ளை வீட்டாரின் அன்பளிப்புகள் போன்ற அனைத்து முறைமைகளும் நம்முடைய பண்டைய தமிழ் கலாச்சாரத்தினை பிசகில்லாமல் பிரதிபலிக்கிறதாகவே இருக்கும். இங்கே ஆபிரகாம் தன் மகன் ஈசாக்குக்குப் பெண்பார்க்கும்படி தன் இனத்தாரிடத்திற்கு தன்னுடைய ஊழியக்காரனை அனுப்புகிறான் அப்படி அனுப்பும் போது "நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குக் பெண் கொள்ளாமல்; நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்திற்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண்கொள்வேன் என்று வானத்துக்கும் பூமிக்கும் தேவனுமாகிய கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டுக்கொடுக்கும்படி, நீ என் கையை என்தொடையின்கீழ் வை என்றான்" ஆதி24:3-4). ஆபிரகாமோ, வானத்துக்கும் பூமிக்கும் ஒரே தேவனாகிய கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டவன், ஆனபடியினால் பல தெய்வங்களையும், தேவதைகளையும், அவைகளின் விக்கிரகங்களையும், உருவங்களையும் உருவாக்கி அவைகளுக்கு மனிதர்களையும், விலங்குகளையும் பலிசெலுத்தி வணங்கி வந்த கானானியரிடம் பெண் கொள்ள விரும்பமில்லை. பாருங்கள் இந்த கானானியர் வானத்தையும் பூமியையும் படைத்த ஒரே மெய் தேவனை வணங்காமல் தங்கள் இஷ்டம் போல தேவனற்ற பலவற்றை வணங்கி பலிசெலுத்தி எப்பேர்பட்ட பாவங்களைச் செய்திருக்கிறார்கள்! எனவே தான் ஆபிரகாம் தன் மகனுக்குப் பெண்பார்க்கும் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவனாகவும் வைராக்கியமுள்ளவனாகவும் இருந்திருக்கிறான்.. கர்த்தருக்கேற்ற வைராக்கியத்தைக் கர்த்தர் கண்டு ஆசீர்வதிப்பாரல்லவா? ஆம்! ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்க சித்தங்கொண்டார் நம் தேவன்.

அன்பு சகோதரிகளே, உங்கள் பிள்ளைகளின் திருமணவிஷயத்தில் எத்தகைய வைராக்கிமுடையவர்களாக இருக்கிறீர்கள்? உங்கள் பிள்ளைகளுக்கு அவர்கள் இஷ்டம்போல் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும்படி சுதந்தரம் கொடுத்துவிட்டீர்களா? இவ்விஷயத்தில் தேவன் ஆதியிலிருந்தே அவருக்குப் பிரியமானபடி, அவருடைய சித்தத்தின்படியே ஆதாமுக்கு ஏவாளை ஏற்படுத்தினார். பல பெண்களை சிருஷ்டித்து ஏதோ ஒரு பெண்ணைத் தெரிந்துகொள்ளும்படி அனுமதிக்கவில்லை. சிந்திப்போம். இதே காரியத்தையே கிறிஸ்தவர்களாகிய நமக்கும் புதியஏற்பாடு மிகத்தெளிவாக வலியுறுத்துகிறது. 2கொரி.6:14-16 வசனங்களில் "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக... கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் (விக்கிரகாராதனைக்காரர்கள்) இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது?...." என்று சொல்லப்பட்டுள்ளது. இதற்கு மிஞ்சி செயல்பட்டோமானால் அது நமக்கு மனநோவாக மாறிவிடும். ஜாக்கிரதையாய் இருப்போம்.

மேலும் ஆபிரகாம், "அவர்: நான் வழிபடும் கர்த்தர் உன்னோடே தம்முடைய தூதனை அனுப்பி, உன் பிரயாணத்தை வாய்க்கப் பண்ணுவார்; ..." (ஆதி.24:40) என்றான். இவனுடைய விசுவாசத்தின்படியே கர்த்தர் காரியத்தை வாய்க்கப்பண்ணினார். அந்தபடியே ஆபிரகாமின் ஊழியக்காரனும் "என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தயவு செய்தருளும்" (ஆதி.24:12-15) என்று வேண்டியதோடல்லாமல், தன் எஜமானனின் குமாரனுக்கென்று தேவனால் நியமிக்கப்பட்ட பெண் இன்னின்ன விதமாக நடந்து கொள்ள வேண்டுமென்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான். இவ்வாறு சொல்லி முடிக்கும் முன்பே தேவன் காரியத்தை வாய்க்கப்பண்ணத் தொடங்கினார். "கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்" என வேதம் கூறுகிறது. சகோதரிகளே, உங்களுடைய பிள்ளைகளின் திருமணக் காரியங்களில் உங்களுடைய Choice என்னவாயிருக்கிறது? ஜெபிக்கும் போது, உம்முடைய சித்ததின்படி ஆகக்கடவது என ஜெபித்துவிட்டு, உள்ளத்தின ஆழத்தில் கர்த்தருக்குச் சித்தமில்லாத அநேக ஆசைகளையும், விருப்பங்களையும், எதிர்பார்ப்புகளையும் வைத்துக் கொண்டிருப்பீர்களானால் உங்கள் உதடுகளினால் தேவனிடத்தில் நெருக்கமாகவும் உள்ளத்தினால் மிகத் தூரமாகவும் இருக்கிறீர்கள் என்று தான் பொருள். தேவனுக்கு மறைவானது ஒன்றுமில்லை. நாம் கிறிஸ்துவின் சந்ததியாராக இருப்போமானால் ABC வகையில், அதாவது A-Age, B-Beauty, C-Caste என்ற வட்டத்திற்குள் உங்களுடைய பிள்ளைகளுக்கான வாழ்க்கைத் துணையைத் தேடாமல் கிறிஸ்துவின் சந்ததியில் தேடுங்கள் அப்போது நலமானதைப் பெற்றுக் கொள்வீர்கள்.

ஆபிரகாமின் ஊழியக்காரன், "அவன் இப்படிச் சொல்லி முடிக்கும் முன்னே, இதோ, ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோரின் மனைவி மில்க்காளுடைய குமாரனாயிருக்கிற பெத்துவேலுக்குப் பிறந்த ரெபெக்காள் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு புறப்பட்டு வந்தாள். அந்தப் பெண் மகா ரூபவதியும் புருஷனை அறியாத கன்னிகையுமாய் இருந்தாள்; அவள் துரவில் இறங்கி, தன் குடத்தை நிரப்பிக்கொண்டு ஏறிவந்தாள். அப்பொழுது அந்த ஊழியக்காரன், அவளுக்கு எதிர்கொண்டோடி; உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும் என்றான். அதற்கு அவள்: குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிரமாய்க் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு, அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள். கொடுத்தபின், உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொல்லி; சீக்கிரமாய்த் தன் குடத்துத் தண்ணீரைத் தொட்டியிலே ஊற்றிவிட்டு, இன்னும் மொண்டுவரத் துரவண்டையில் ஓடி, அவனுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொண்டு வார்த்தாள்" (ஆதி.24:25-20) என வாசிக்கிறோம். இவ்வசனங்களிலிருந்து ரெபெக்காளின் நற்குணங்களைக் கண்டு கொள்ள முடிகிறது.

முதலாவது, அவள் ஒரு சுறுசுறுப்பான வாலிபப் பெண் என அறிய முடிகிறது. அத்தோடுகூட தன் பெற்றோரின் வீட்டு வேலைகளில் உதவிசெய்யக்கூடியவளாகவும் இருந்திருக்கிறாள். மேலும் அந்நியரையும் மதித்து அவர்களின் தேவையை அறிந்து தாகம் தீர்க்கக் கூடிய பண்பினையும் பெற்றுள்ளாள். எனவே தான் சிறிதளவும் தாமதிக்காமல், ஆபிரகாமின் ஊழியக்காரன் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டவுடனே, குடியும் என் ஆண்டவனே, என்று சீக்கிரமாய் தன் தோளிலிருந்த குடத்தை இறக்கி அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள். அதுமாத்திரமல்லாது அவனுடைய ஒட்டகங்களுக்கும் அவைகள் குடித்துத் தீருமட்டும் தண்ணீர் தொட்டியை நிரப்ப ஆரம்பித்தாள் என்ன சுறுசுறுப்பு! எப்பேர்பட்ட நற்குணம்! இன்றைய வாலிபப் பிள்ளைகள் இப்படி இருக்கிறார்களா? TV முன்பும் செல்போன் வைத்துக்கொண்டும் மற்றவர்கள் பெயர் சொல்லி கூப்பிட்டால் கூட செவிசாய்க்காதவர்களாய் இருக்கிறார்களா? அல்லது உங்கள் பெண்பிள்ளைகளை வீட்டில் ஒரு வேலையும் செய்ய வேண்டாமென்று செல்லமாக வளர்க்கிறீர்களா? நாம் எப்படி நம்



பிள்ளைகளை வளர்க்கவேண்டுமென அறிந்து கொள்ள வேதாகமத்திற்குத் திரும்புங்கள் அதின்படி பழக்குவியுங்கள்.

ரெபெக்காள் ஆபிரகாமின் ஊழியக்காரன் ஒரு அந்நியன் தானே என்று அலட்சிமயாக இருக்கவில்லை அல்லது இவருக்குத் தண்ணீர் கொடுத்தது போதாதா, ஒட்டகங்களுக்கும் கொடுக்க வேண்டுமா என்றும் அவள் நினைக்கவில்லை. ஒட்டகங்களுக்கும் தண்ணீர் மொண்டு வார்த்தாள் ஒரு ஒட்டகம் ஒரே நேரத்தில் கிட்டத்தட்ட 100 லிட்டர் தண்ணீர் குடிக்கும் என்று சொல்லுகின்றனர் அப்படியானால் இவள் அந்த ஊழியனோடு வந்த ஒட்டகங்கள் அனைத்திற்கும் அநேக குடங்கள் மொண்டு வார்த்திருக்க வேண்டும். இவளுடைய இச்செயல் இவளுடைய சுறுசுறுப்பான பரபரப்புடன் செயல்படும் குணத்தைக் காட்டுகிறதல்லவா! இவ்வாறு தான் ஆபிரகாமும் அந்நியரை உபசரித்திருக்கிறார் என்பதை வாசித்திருப்போம். இவளுடைய இச்செயலுக்குக் கிடைத்த பரிசு அரைச்சேக்கல் எடையுள்ள பொற்காதணி மற்றும் இரண்டு கடகங்கள்.

மேலும் ஆபிரகாமின் ஊழியன், நாங்கள் உன் தகப்பன் வீட்டில் தங்கவேண்டும் என்று கேட்டவுடன் எந்தத் தயக்கமுமின்றி. "எங்களிடத்தில் வைக்கோலும் தீவனமும் வேண்டிய மட்டும் இருக்கிறது; இராத்தங்க இடமும் உண்டு என்றாள்" (ஆதி.24:2). அதன்படி அந்தப் பெண் ஓடி, இந்தக் காரியங்களைத் தன் தாயின் வீட்டிலுள்ளவர்களுக்கு அறிவித்தாள்" (வச.28). ஒரு வாலிபப் பெண் அந்நிய மனிதனுக்கும் அவன் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்த்தது, அந்த ஊழியக்காரன் அவளுக்கு அணிவித்த பொற்காதணிகள், கடகங்கள், மற்றும் அந்த மனிதன் விசாரித்த அத்தனை விஷயங்களையும் ஒன்றையும் தன் தாயின் வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒழிவு மறைவில்லாமல் அறிவித்தாள். இந்த வசனத்தை வாசிக்கும் போது அவளுடைய வெளிப்படைத் தன்மை விளங்குகிறது. தன் வீட்டாரிடம் எதையும் மறைக்கக்கூடாது என அறிந்திருந்திருக்கலாம். இன்றைய நாளில் நம்வீட்டில் திருமணமாகாத பெண்பிள்ளைகள் எப்படி நடந்து கொள்கின்றனர்? உங்கள் பிள்ளைகள் உங்களிடம் எதையும் மறைக்காமல் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளுகிறார்களா? உங்கள் பிள்ளைகள் யாவரும் கர்த்தரால் உங்களுக்குக் கிடைத்த சுதந்தரம். அவர்களுடைய எல்லா காரிங்களுக்கும் நீங்கள் தான் பொறுப்பாளி. கர்த்தர் ஒருநாளில் உங்களிடத்தில் தாம் ஒப்புவித்த அனைத்திற்கும் கணக்குக் கேட்பார் என்பதை மறவாமல் சிறுவயது முதற் கொண்டே ‘பிள்ளையாண்டான் நடக்க வேண்டிய வழியிலே நடத்துங்கள்’ மற்றவர்களை குறிப்பாக பெரியவர்களை மதித்து நடக்கவும் அவர்களை கனம் பண்ணவும் கற்றுக் கொடுங்கள்.

அடுத்ததாக, ரெபெக்காளின் இன்னொரு குணாதிசயம் கர்த்தரின் சித்தத்திற்கேற்ப நடப்பதற்குத் திட்டமிடுகிறவளாக இருந்தாள் எனக்கூறலாம். ஆபிரகாமின் ஊழியக்காரன் ரெபெக்காளை தன் எஜமானின் மகன் ஈசாக்குக்கு மனைவியாகும்படி அவளுடைய தகப்பன் பெத்துவேலிடமும், சகோதரன் லாபானிடமும் கேட்ட போது "அப்பொழுது லாபானும் பெத்துவேலும் பிரதியுத்தரமாக: இந்த காரியம் கர்த்தரால் வந்தது உமக்கு நாங்கள் நலம் பொலம் ஒன்றும் சொல்லக்கூடாது. இதோ, ரெபெக்காள் உமக்கு முன்பாக இருக்கிறாள்; கர்த்தர் சொன்னபடியே அவள் உமது எஜமானுடைய குமாரனுக்கு மனைவியாகும்படிக்கு அவளை அழைத்துக் கொண்டுபோம் என்றார்கள். ஆபிரகாமின் ஊழியக்காரன் அவர்கள் வார்த்தைகளைக் கேட்டபோது, தரைமட்டும் குனிந்து, கர்த்தரைப் பணிந்து கொண்டான். பின்பு அந்த ஊழியக்காரன் வெள்ளியுடைமைகளையும், பொன்னுடைமைகளையும், வஸ்திரங்களையும் எடுத்து, ரெபெக்காளுக்குக் கொடுத்ததுமன்றி, அவளுடைய சகோதரனுக்கும் தாய்க்கும் சில உச்சிதங்களையும் கொடுத்தான்" (ஆதி.24:50-53). தொடர்ந்து வாசிப்போமானால் இது ஒரு அழகிய ஒழுங்குப் படுத்தப்பட்ட திருமண ஏற்பாடாக இருந்ததை அறிந்துகொள்ளலாம்.

"அப்பொழுது அவர்கள்: பெண்ணை அழைத்து, அவள் வாய்ப்பிறப்பைக் கேட்போம் என்று சொல்லி, ரெபெக்காளை அழைத்து; நீ இந்த மனிதனோடே கூடப்